II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.165 / 2021**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 01.07.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | S.Gopalakrishnan | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>21 மற்றும் 22ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

எனக்கு வயது 71 ஆகும். வழக்கு தாக்கல் செய்த 2021ல் எனது வயது 61 என்று குறைத்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பான காரணம் எதுவும் இல்லை. நான் SSLC படித்துள்ளேன். தமிழ் நன்கு தெரியும். ஆங்கிலம் அவ்வளவாக தெரியாது. எனது பாட்டி பெயர் P. பொன்னம்மாள் ஆகும். எனது தாத்தா பெயர் A.பூங்காவனம் ஆகும். எனது தாத்தா மற்றும் பாட்டிக்கு எனது தந்தை A.P. ஸ்ரீராமுலு மட்டும் தான் ஒரே வாரிசு ஆவார். என் தாயார் பெயர் சுலோச்சனா ஆகும். என் தாயார் உயிருடன் உள்ளார். என் தந்தைக்கு நான், பாலகிருஷ்ணன், சந்தானகிருஷ்ணன், ஜெயலட்சுமி, மீராபாய் ஆகியோர் வாரிசுகள் ஆவோம். என் பாட்டி பொன்னம்மாளுக்கு சொந்த வீடு உள்ளது. அதன் முகவரி எண்.40, பரமசிவசெட்டி தெரு, பார்க் டவுன், சென்னை – 3 ஆகும். என் தாத்தா இரண்டு மளிகை கடைகளை வைத்திருந்தார். என் பாட்டி கடை வியாபாரத்தை பார்க்கமாட்டார். வீட்டில் தான் இருந்தார். இந்த விவரத்தை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது தாத்தா 1964ல் இறந்தார். அதன் பிறகு பார்க் டவுனில் இருந்த வீட்டில் என்

பாட்டியோடு என் தந்தை வசித்து வந்தார். என் பெற்றோருக்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்று எனக்கு தெரியாது. நான் 13.05.1955 ல் பிறந்தேன். என் தந்தை திருமணத்திற்கு பிறகும் பாட்டியோடு தான் கூட்டு குடும்பமாக வசித்து வந்தார். என் தந்தை என் பாட்டிக்கு முன்னதாகவே 1996 ல் அதே வீட்டில் இறந்துவிட்டார். அதன் பிறகும் என் தாயார் மற்றும் நாங்கள் அனைவரும் அதே வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். எனக்கு 12.06.1985 ல் திருமணம் ஆனது. என் திருமணத்திற்கு பிறகும் இன்று வரை அதே வீட்டில் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம். எனது சகோதர சகோதரிகளுக்கும் அந்த வீட்டில் இருக்கும் போது தான் திருமணம் ஆனது. மீராபாய்க்கு எந்த ஆண்டு திருமணம் ஆனது என்று ஞாபகம் இல்லை. எனது திருமணத்திற்கு பிறகு ஒரு வருடம் கழித்து திருமணம் ஆனது. ஜெயலட்சுமிக்கு எனக்கு முன்பாகவே 1982 ம் ஆண்டு திருமணம் ஆனது. எனக்கு திருமணம் ஆன பிறகு அடுத்தடுத்து என் சகோதர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் தனியார் லாரி போக்குவரத்து நிறுவனத்தில் மேலாளராக வேலை பார்த்தேன். வழக்கு சொத்துகளின் விவரங்கள் எனக்கு ஓரளவு தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண்கள் 347/2 ல் 0.41 செண்ட், சர்வே எண் 371ல் 3 ஏக்கர் 39 செண்ட் ஆகும். சர்வே எண்.372, 348 க்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை. மேற்கண்ட நான்கு சர்வே எண்களில் உள்ள சொத்துகளையும் என் பாட்டி பொன்னம்மாள் தான் வா.சா.ஆ.1ன் படி கிரையம் பெற்றார். வா.சா.ஆ.1ல் சுகஜீவனம் பூங்காவனம் பாரியாள் பொன்னம்மாள் என்று உள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட சொத்துகளுக்கு என் பாட்டி பெயரில் தான் பட்டா உள்ளது. சர்வே எண். 372 சொத்தை வா.சா.ஆ.2ன் படி என் பாட்டி பொன்னம்மாள் 26.08.1975 தேதியிட்ட ஆவணம் மூலம் ராஜம்மாளுக்கு விற்றுவிட்டார் என்றால்

சரிதான். அதில் முதல் சாட்சியாக என் தந்தை கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். கங்காதரன் என் தங்கை ஜெயலட்சுமியின் மாமனார் ஆவார். வா.சா.ஆ.3 ன் படி என் பாட்டி 09.02.1981ல் கங்காதரனுக்கு ஒரு பொது அதிகார ஆவணம் வழங்கியுள்ளார் என்றால் சரிதான். எந்த சர்வே எண்களுக்கு பொது அதிகார ஆவணம் வழங்கப்பட்டது என்றால் சர்வே எண்கள் 347/2 ல் 0.41 செண்ட், சர்வே எண் 371ல் 3 ஏக்கர் 39 செண்ட், சர்வே எண்.372ல் 2 ஏக்கர் 99 செண்ட், சர்வே எண். 348ல் 3 ஏக்கர் 27 செண்ட் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது. வா.சா.ஆ.3ல், "மேற்படி பத்திரத்தில் கண்ட புஞ்சை நிலத்தை நான் எனது சொந்த பொருளை கொண்டு சுத்த கிரையம் பெற்று அது முதல் எனக்கு சொந்தமும் பாத்தியதையும் உள்ளதாய் இன்று வரை எனது சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது" என்று கண்டுள்ளது என்றால் சரிதான். 1981ல் பவர் பத்திரம் கொடுக்கும் போது நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக இருந்தோம் என்றால் சரிதான். 1981ல் எனக்கு 26 வயதிருக்கும் என்றால் சரிதான்.

(இந்நிலையில் 21 மற்றும் 22 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)